# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

Calender

Miscellaneous — Case No — CC 108/18

Priliminary Register

Sessions

Prosecution — PW 1

Deposition of witness for — Defence

Court

Name — Muthukaruppan

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

01.04.2019 முதல் விசாரணை:

நான் மதுரை ஜீவாநகரில் குடியிருந்து வருகிறேன். நான் கப்பலூர் சிட்கோவில் மீனாட்சி என்ற பெயரில் லேத் நடத்தி வருகிறேன். 04.05.2018ம் தேதி மாலை 3.50 மணியளவில் நான் என் வண்டி டிஎன் 58 ஏ 1397 என்ற பதிவெண் கொண்ட பல்சர் என் லேத் அருகில் உள்ள கோவில் பக்கம் நிறுத்திவிட்டு லேத் சென்று அரை மணிநேரம் கழித:து வந்து பார்த்தபோது என் வாகனத்தை காணவில்லை வண்டியை தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை. நான் கொடுத்துதபுகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் மனு அ.சா,ஆ.1. அப்போது வண்டி காணாமல் போன போது அழகர் சாமி என்னுடன் இருந்தார். பின்னர் மேற்படி என் வண்டியை நீதிமன்றத்தின் மூலம்மனு செய்து பெற்றுக்கொண்டேன். நான் நீதிமன்றத்திற்கு என் வாகனத்தை கொண்டு வந்துள்ளேன்.

போலிசார் என்னை விசாரித்தார்கள். காணாமல் போன என் வாகனம் சா.பொ. 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் கப்பலூரில் சொந்தமாக 10 வருடங்களாக கம்பெனி நடத்தி வருகிறேன். தொழில் ரீதியாக நான் வெளியூர் சென்று வருவது வழக்கம் என்றால் சரிதான். நான் இரு சக்கர வாகனத்தில் தான்வெளியூர்செல்வேன். மற்ற விசேச காலங்களிலும் நான் அவ்வாறு தான் செல்வேன் என்றால் சரிதான். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகாரில் தேதி அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருடு போன மறுநாள் வாகனம் கிடைத்தது என்றால் சரிதான். நீதிமன்றத்தின் மூலம் கிடைத்தது. நான் தொழில்ரீதியாக செல்லும் போது இரு சக்கர வாகனத்தை எங்கு நிறுத்தினேன் என்பதை மறந்துவிட்டு காணாமல் போனதாக காவல் நிலையத்தில் பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. வாகனத்தை எங்கு நிறுத்தினோம் என்பதை தெரிந்து கொண்டு புகாரை வாபஸ் பெறுவதற்காக வரும் போது காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரை வாபஸ் பெற இயலாது என்றும் பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகார்கொடுக்கும் போது என் வண்டியை திருடியவர் யார் என்று தெரியாது என்று தான் புகார்கொடுத்துள்ளேன். எதிரியை நான் இதற்கு முன்பாக பார்த்தது கிடையாது என்றால்சரிதான். எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமிலலை என்றால் சரியல்ல. ஞாபகமறதியால் வண்டியை வேறு இடத்தில் நிறுத்தி விட்டு பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் பொய்யான புகார் என்றால் சரியல்ல.